**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 177 / 2022**

**வா.சா.2 – தவமணி** **05.03.2025**

**குறுக்கு விசாரணை :–**

என்னிடம் காட்டப்படும் பிராது ஆங்கிலத்தில் உள்ளதால் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் நான் 2ம் வாதி ஆவேன். எனது நிரூபண வாக்குமூலத்திற்கு 1வது வாதி விபரம் கூறினார். எனது முதல் விசாரணையில் நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன் ஆனால் எழுதப்படிக்க தெரியாது. இந்த வழக்கில் அனைத்து ஆவணங்களையும் வா.சா.1 தான் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். கருப்பணன் அம்பலம் என்பவருக்கு வாரிசுகள் யார் என்றால் ராக்கு, முனியம்மாள், தவமணி, ராஜ்குமார் ஆவார்கள். தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 4 பேருக்கும் தாவா சொத்துக்களில் பங்கு உள்ளது என்றால் சரிதான். முனிச்சாமியின் வாய்க்காலை அழித்துவிட்டதாக என் மீது பூவந்தி காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருந்தார்கள் என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கை மீது நான் சிவகங்கை நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அபராதம் செலுத்திவிட்டு செலுத்தவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. ராக்கு சொன்னதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி

**மானாமதுரை**